**செ.வெ.எண்: 11** **நாள்: 18.05.2021**

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V.செந்தில்பாலாஜி அவர்களின் சார்பில் "V.செந்தில்பாலாஜி பவுண்டேசன்ஸ்" மூலம் ரூ.21.84 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் கருவிகளை கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.**

அதன்விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீவிர சிகிச்சை வழங்கத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.V.செந்தில்பாலாஜி அவர்களின் அறிவுரையின் பேரில் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் நேற்றுவரை 11,627 நபர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அதில் 9995 நபர்கள் குணமடைந்துள்ளனர். தற்போது 1527 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் அரசு மருத்துவக்கல்லூரி, அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 958 நபர்களும், கொரோனா பாதுகாப்பு மையத்தில் (CCC) 280 நபர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 289 நபர்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 370 படுக்கைகள் ஆக்சிஜன் வசதியுடன் தயார் நிலையில் உள்ளது . இதில் 70 படுக்கைகள் அதிநவீன வசதிகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) பயன்படுத்தப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்றாளர்களுக்கு ஆரம்ப சிகிச்சை அளிக்க ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யும் கருவிகள் அதிக அளவில் தேவைப்படுவதால் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் சார்பில் "V.செந்தில்பாலாஜி பவுண்டேசன்ஸ்" மூலம் ரூ.21.84 லட்சம் மதிப்பிலான 30 ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் கருவிகளை கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்க முடிவு செய்து, முதற்கட்டமாக 20 கருவிகளை நேற்று (17.5.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிர்வாகத்திடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இன்னும் ஓரிரு தினங்களுக்குள் மேலும் 10 கருவிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என்றும் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.V.செந்தில்பாலாஜி அவர்கள் தெரிவித்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மனித நேயமிக்க இந்த செயல் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிகழ்வின் போது அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி க.சிவகாமசுந்தரி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.மாணிக்கம், கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அசோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V.செந்தில்பாலாஜி அவர்களின் உத்தரவின் பேரில் சிறப்பு முயற்சியாக பள்ளப்பட்டி, அரவக்குறிச்சி, வேலாயுதம்பாளையம், அரசுக்கல்லூரி, காணியாளம்பட்டி, கோவைகுளம், குளித்தலை மற்றும் வெள்ளியணை மருத்துவமனைகளில் புதிதாக ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் (Concentrator) 25.05.2021 முதல் தொடர்ந்து அமைக்கவும், புகளூரில் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்திற்கு சொந்தமான திருமண மண்டபத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 150 படுக்கை வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**